# <u>குளித்தலை நகராட்சி</u>

18.02.2021.ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு
நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ம.முத்துக்குமார்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளிலும் 335 எண்ணிக்கை 40W குழல் விளக்குகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மேற்கண்ட குழல் விளக்குகள் சரியாக செயல்படாத நிலையில் அதிக அளவில் மின்சாரம் தேவைப்படுகிறது. எனவே, நகராட்சியுடைய வருவாயில் மின்கட்டணத்திற்காக அதிக தொகை செலவாகிறது. எனவே, மின் சிக்கனம் மற்றும் மின் கட்டணத்தை குறைக்க மேற்கண்ட கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ள குழல் விளக்குகளை அகற்றிவிட்டு அவ்விடத்தில் 30 வாட்ஸ் எல்.இ.டி. விளக்குகளை (ISI தரத்துடன்) பொருத்தும்பட்சத்தில் நான்கில் மூன்று பங்கு மின்சாரம் கட்டுப்படுத்தலாம் என்பதனை கருத்தில்கொண்டு இந்நகராட்சி பயன்பாட்டிற்கு 30 வாட்ஸ் கொண்ட 335 எல்.இ.டி. பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள ரூ.9,90,000/– (ரூபாய் ஒன்பது லட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). செலவினத் தொகை ரூ.9,90,000/–, 2021–2022ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.169/2021/இ1)

பொருள்– 02. குளித்தலை நகராட்சிக்கு LED மின் விளக்குகள் சப்ளைசெய்தல் பணிக்கு ரூ.6,50,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள 12.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விவரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சிக்கு LED மின் விளக்குகள் சப்ளை செய்தல் பணி | நந்தினி ஏஜென்சீஸ், குளித்தலை. | 0.08 % மதிப்பீட்டைவிட குறைவு. |
| | | சரவணா எலக்ட்ரிக்கல்ஸ், கரூர் | 0.61 % மதிப்பீட்டைவிட அதிகம். |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.08 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள நந்தினி ஏஜென்சீஸ் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1857/2020/இ1)

பொருள்– 03. குளித்தலை நகராட்சிக்கு LED மின் விளக்குகள் சப்ளைசெய்தல் பணிக்கு ரூ.9,90,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள 16.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விவரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சிக்கு LED மின் விளக்குகள் சப்ளை செய்தல் பணி | நந்தினி ஏஜென்சீஸ், குளித்தலை. | 0.08 % மதிப்பீட்டைவிட குறைவு. |
| | | சரவணா எலக்ட்ரிக்கல்ஸ், கரூர் | 0.28 % மதிப்பீட்டைவிட அதிகம். |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.08 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள நந்தினி ஏஜென்சீஸ் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.169/2021/இ1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சியில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் திரு.ப.இராமமூர்த்தி என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP NO.2054/2021 இல் தனக்கு ரசாணை எண்.562, நிதி, நாள்–28.10.1998இல் பதவி உயர்வின்றி 30 ஆண்டுகள் ஒரே பதவியில் இருக்கும்பட்சம் போனஸ் ஊக்க ஊதியம் வழங்க வேண்டும் என்பதால் தனக்கு போனஸ் ஊக்க ஊதியம் வழங்க கோரிய வழக்கில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி ஆணையர், குளித்தலை அவர்களை எதி
ர்வாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக எதிர் வாதாட ஏதுவாக வழக்கு கோப்பினை திரு.லூர்துபவுல்மௌரியா, நகராட்சி நிலை சட்ட ஆலோசகர் வசம் ஒப்படைக்கவும் வழக்கு செலவினத்திற்காகவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1606/2017/சி1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சிப் பகுதியில் உள்ள வையாபுரிநகர் ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பிடம் மராமத்து பணி செய்தல் பணிக்கு ரூ.3,20,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள 16.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விவரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி பகுதியில் உள்ள வையாபுரிநகர் ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பிடம் மராமத்துப் பணி செய்தல் | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 0.07 % மதிப்பீட்டைவிட குறைவு. |
| | | திரு.R.N.வெங்கடாஜலபதி, குளித்தலை. | 0.91 % மதிப்பீட்டைவிட அதிகம். |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.07 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.M.செந்தில்குமார், ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1657/2020/இ1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சி அலுவலக வளாகத்திற்குள் Web Camera பொருத்தும் பணிக்கு ரூ.3,50,000/– மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 15.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விவரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி அலுவலக வளாகத்திற்குள் Web Camera பொருத்தும் பணி | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 0.04 % மதிப்பீட்டைவிட குறைவு. |
| | | திரு.R.N.வெங்கடாஜலபதி, குளித்தலை. | 0.69 % மதிப்பீட்டைவிட அதிகம். |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.04% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.M.செந்தில்குமார், ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1491/2020/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட 1வது வார்டு மணத்தட்டை மேலக்குடித்தெருவீல் காவிரி குடிநீர் இணைப்பு இல்லை. அந்தப் பகுதியில் சுமார் 50 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். எனவே, அந்தப் பகுதியில் புதிய குடிநீர் குழாய் இணைப்பு அமைக்க வேண்டி உள்ளது. எனவே, புதிய குடிநீர் குழாய் இணைப்பு அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத் தொகையை 2020–2021ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண்.202/2021/இ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட 19வது வார்டு கொல்லம்பட்டறை தெருவில் நீண்ட வருடங்களாக சாக்கடை நீர் தேங்கி கிடக்கிறது. அதனை ஆணையர் அவர்கள் ஆய்வு செய்து வழங்கிய அறிவுரையின்படியும், தெரு பொதுமக்களின் ஒத்துழைப்பின்படியும் கால்வாய் சரிசெய்ய பைப்லைன் அமைத்து கழிவுநீர் முழுவதையும் வெளியேற்ற ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இந்த மேற்கண்ட பணிக்கு செய்யப்படும் செலவினத்தை 2020–2021 பொது நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.203/2021/இ1)

**குளித்தலை நகராட்சி**

18.02.2021.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 152 | அனுமதிக்கப்பட்டது. |
| 2 | 2 | 153 | அனுமதிக்கப்பட்டது. |
| 3 | 3 | 154 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 4 | 4 | 155 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 156 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 6 | 6 | 157 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 7 | 7 | 158 | அனுமதிக்கப்பட்டது. |
| 8 | 8 | 159 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/—ம.முத்துக்குமார்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.